

தமிழ்நாடு சட்டமன்ற எதிர்கட்சி தலைவர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலினை அவர்களை கைது செய்த த.வெ.க. அரசின் அராஜக போக்கை கண்டித்து விழுப்புரம் மத்திய மாவட்ட திமுக சார்பில், விழுப்புரம் மத்திய மாவட்ட கழக பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா.இலட்சுமணன் தலைமையில், விழுப்புரம், காந்தி சிலை அருகில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றதில் டாக்டர் இரா.இலட்சுமணன் கைது செய்யப்பட்டார். உடன் மாவட்ட பொறுப்புக்குழு உறுப்பினர்கள் இரா. ஜனகராஜ், இரா.கண்ணப்பன், விழுப்புரம் மேற்கு நகரகழக பொறுப்பாளர் இரா.சக்கரை, விழுப்புரம் கிழக்கு நகரகழக பொறுப்பாளர் எஸ். வெற்றிவேல், ஒன்றிய கழக செயலாளர்கள், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கிளைக்கழக செயலாளர்கள், கிளை நிர்வாகிகள் மற்றும் பொது உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டனர்.

## பல்லாவரத்தில் சாலை மறியல்!

பல்லாவரம், ஆக.6–

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் பல்லாவரம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட குரோம் பேட்டை பேருந்து நிலையம் அருகில் எதிர்க்கட்சித் தலைவர் கழக இளைஞரணி செயலாளர் இளைஞர்களின் நம்பிக்கை நட்சத்திரம் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தஞ்சையில் விவசாய சங்க பிரதிநிதிகள் உடன் காவிரியின் நீர் பிரச்சினைக்காக பிரமாண்டமான ஆர்ப்பாட்டம் நடத்தியதை பொறுத்துக் கொள்ள முடியாத விஜயின் கேடுகெட்ட த.வெ.க அரசு ஆணவத்துடனும் வஞ்சகத்துடனும் உதயாநிதி ஸ்டாலின் அவர்களை கைது செய்ததை கண்டித்து மாவட்டக் கழகச் செயலாளர் முன்னாள் அமைச்சர் தா.மோ. அன்பரசன் அவர்களின் அறிவுறுத்தலின்படி மாவட்டக் கழகத் துணைச் செயலாளர் இ.கருணாநிதி அவர்களின் ஆலோசனைப்படி குரோம் பேட்டை பேருந்து நிலையம் அருகில் தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 2டின் தலைவர் பல்லாவரம் வடக்கு பகுதி கழக செயலாளர் இ. ஜோசப் அண்ணாதுரை தலைமையில் பல்லாவரம் தெற்கு பகுதி கழகச் செயலாளர் இ.எஸ். பெர்னார்ட், மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

## ‘வாட்ஸ் அப்’பில் வலம் வருவது!




### 8ஆம் ஆண்டு நினைவு நாள்!

## கடலூர் கிழக்கு மாவட்டம் முழுவதும் கலைஞர் திருவுருவப் படத்திற்கு மலரஞ்சலி!

### மாவட்டச் செயலாளர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் எம்.எல்.ஏ. வேண்டுகோள்!



கடலூர், ஆக. 6-

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 8ஆம் ஆண்டு நினைவுநாளை முன்னிட்டு கடலூர் கிழக்கு மாவட்டத்தில் உள்ள மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழகங்களில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்த, கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர், கடலூர் கிழக்கு மாவட்ட திமுக செயலாளர் எம். ஆர். கே. பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:-

முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் 8ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு வருகின்ற 07.08.2026 வெள்ளிக்கிழமை அன்று கடலூர் கிழக்கு மாவட்டத்தில் உள்ள மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், ஊராட்சி, வட்டம், வார்டு, கிளை கழகங்கள் தோறும் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தி, ஏழை, எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் செய்திட வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன். அதுசமயம் சம்பந்தபட்ட இடங்களில் கடலூர் கிழக்கு மாவட்டத்தை சேர்ந்த மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், கிளை வட்டம், வார்டு கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சிப் பிரதிநிதிகள், மாநகர மேயர், மண்டல குழு தலைவர்கள், நகராட்சி, பேரூராட்சி மன்ற தலைவர்கள், துணைத் தலைவர்கள் மற்றும் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர்கள், ஊராட்சி மன்றத் தலைவர், துணைத் தலைவர்கள், முன்னாள் மாவட்டக்குழு, ஒன்றியக்குழு ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், மாவட்ட, மாநரக, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக இளைஞரணி, மாணவரணி, மகளிரணி, மகளிர் தொண்டரணி, வழக்கறிஞர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, தொண்டரணி, தொழிலாளர் அணி, மீனவரணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவர் அணி, வர்த்தகர் அணி, ஆதிதிராவிடர் நலக் குழு அணி, சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு, தகவல் தொழில்நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணி மற்றும் தொழிலாளர் முன்னேற்றச்சங்கம் ஆகிய அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழக தோழர்கள், பொது மக்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு எம்.ஆர். கே.பன்னீர்செல்வம் எம். எல்.ஏ. அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.

### கரூர் மாவட்டம் முழுவதும்

## முத்தமிழறிஞர் கலைஞர் 8ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்ச்சி!

### மாவட்டச் செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. அறிக்கை!



கரூர்.ஆக.6.

மக்கள் நல ஆட்சிக்கு புதிய பரிமாணத்தை உருவாக்கிய தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு, ஆகஸ்ட் 7ஆம் தேதி கரூர் மாவட்டம் முழுவதும் நினைவு நாள் நிகழ்ச்சிகளை நடத்திட வேண்டும் என்று மாவட்டக் கழகச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான வி.செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வி.செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. கூறியிருப்பதாவது:

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழர் வரலாற்றில் என்றும் அழியாத இடத்தைப் பெற்ற மாமனிதர். அவரது அரசியல் வாழ்வும், இலக்கியப் பங்களிப்பும், சமூகநீதிக்கான இடையறாத போராட்டங்களும், தமிழ்மொழி வளர்ச்சிக்காக ஆற்றிய அரும்பணிகளும் தலைமுறைகள் கடந்தும் வழிகாட்டும் கலங்கரை விளக்கமாகத் திகழ்கின்றன. கல்வி, சமூகநீதி, இடஒதுக்கீடு, பெண்கள் முன்னேற்றம், விவசாயிகள் நலன், தொழிலாளர் உரிமைகள், உள்ளாட்சி அமைப்புகளின் வலிமை, தமிழ்மொழி வளர்ச்சி, தமிழர் பண்பாட்டு பெருமை உள்ளிட்ட அனைத்துத் துறைகளிலும் வரலாற்றுச் சாதனைகளைப் படைத்து தமிழகத்தை முன்னேற்றப் பாதையில் அழைத்துச் சென்ற தமிழினத் தலைவர் கலைஞர். அவர்கள் உருவாக்கிய மக்கள் நலத் திட்டங்களும், சட்டங்களும், கொள்கைகளும் இன்றளவும் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கான உறுதியான அடித்தளமாக விளங்கி வருகின்றன.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் நினைவு நாளை முன்னிட்டு சட்ட மன்ற உறுப்பினர்கள் மாவட்ட மாநில மாவட்ட மாநகர, நகர, பகுதி, ஒன்றிய, பேரூர், வார்டு, கிளைக் கழகங்கள் மற்றும் அனைத்து அணிகளும் தங்களது பகுதிகளில் டாக்டர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்துதல், பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல், அன்னதானம். மாணவ -மாணவிகளுக்கு கல்வி உபகரணங்கள் வழங்குதல் உள்ளிட்ட மக்கள் நலப் பணிகளை சிறப்பாக மேற்கொள்ள வேண்டும். மேலும், கலைஞர் அவர்கள் வாழ்நாள் முழுவதும் வலியுறுத்திய சமூகநீதி, சுயமரியாதை, சமத்துவம், மதச்சார்பின்மை, மொழி உரிமை ஆகிய உயரிய கொள்கைகளை பொதுமக்களிடம் எடுத்துரைக்கும் நிகழ்ச்சிகளும் நடத்திட கேட்டுக் கொள்கிறேன்.

ஆகையால், கரூர் மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் வார்டு. கிளை கழக செயலாளர்கள் பொறுப்பாளர்கள் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள், தொண்டர்கள் அனைவரும் தங்களது பகுதிகளில் பெருந்திரளாகப் பங்கேற்று, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாளை மக்கள் நலப் பணிகளுடன் எழுச்சியோடு அனுசரிக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு மாவட்ட கழக செயலாளர் முன்னாள் அமைச்சர் வி. செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### நெல்லை மாநகராட்சி மேலப்பாளையம் மண்டலத்தில்

## 6 வார்டுகளில் ரூ.2.87 கோடி மதிப்பில் சிமெண்ட் சாலை பணி நிறைவு!

### நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார்!

நெல்லை.ஆக.6.

நெல்லை மேலப்பாளையம் மண்டலம், 51, 52, 37, 45, 46, 47 ஆகிய 6 வார்டுகளில் நெல்லை மாநகராட்சி சார்பில்,ரூபாய் 2.87 கோடி மதிப்பீட்டில், புதிய சிமெண்ட் சாலை அமைக்கப்பட்டுள்ளது.மேலப்பாளையம் ஜமாலியா தைக்கா தெருவில் நடைபெற்ற நிகழ்வில் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வஹாப் பங்கேற்று புதிய சிமெண்ட் சாலையை துவக்கி வைத்து மக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணித்தார்.

இந்நிகழ்வில் மேலப்பாளையம் மேற்கு பகுதி கழகச் செயலாளர் துபாய் சாகுல் ஹமீது,வட்ட செயலாளர்கள் அலி ஷேக் மன்சூர்,நரவன் முகைதீன்,சாலி மௌலானா, மாமன்ற உறுப்பினர் ஹாபீஸ் முகைதீன் அப்துல் காதர், பொறியாளர் அணி மாவட்ட துணை அமைப்பாளர் மானூர் முகமது அலி, பேட்டை தி.மு.கனி, தாழை ஷாஜஹான், வட்ட பிரதிநிதிகள் புகாரி,காசி லெப்பை புகாரி,நெசவாளர் அணி மாநகர துணை அமைப்பாளர் ரகுமான் ஷா,மாணவரணி மாநகர துணை அமைப்பாளர் வாலன் ஹாரிஸ்,சிறுபான்மை நல உரிமை பிரிவு மேலப்பாளையம் பகுதி செயலாளர் மீன் கனி,மாணவரணி நெல்லை பேட்டை பகுதி அமைப்பாளர் அர்ஷத்,தகவல் தொழில்நுட்ப அணி மாஸ் முகைதீன், சீட்டு சாகுல் உள்பட கழக உடன் பிறப்புகள் கலந்து கொண்டனர்.

### விழுப்புரம் தெற்கு மாவட்டம் சார்பில்

## முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நாள் அமைதிப் பேரணி!

### மாவட்டப் பொறுப்பாளர் பொன்.கௌதமசிகாமணி அறிக்கை!



விழுப்புரம், ஆக. 6-

விழுப்புரம் தெற்கு மாவட்ட கழக பொறுப்பாளர் டாக்டர் பொன். கௌதமசிகாமணியின் அறிக்கை வருமாறு:-

நவீன தமிழகத்தை கட்டமைத்த சிற்பி , இனம் - மொழி காக்க இறுதி மூச்சு வரை உழைத்திட்ட தமிழர்களின் தகைசால் தலைவர் , தமிழர் தம் நெஞ்சங்களில் நிரந்தரமாக வாழ்ந்துகொண்டிருக்கும் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 8 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு , விழுப்புரம் ( தெற்கு ) மாவட்ட தி.மு.க. சார்பில் வரும் 07 - 08 - 2026 ( வெள்ளிக்கிழமை ) காலை 8.30 மணிக்கு அரசு விழுப்புரம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை (முண்டியம்பாக்கம்) எதிரில் இருந்து மாவட்ட கழக பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி அவர்கள் தலைமையில் அமைதி ஊர்வலம் புறப்பட்டு , சிந்தாமணி கிராமத்தில் அமைந்துள்ள தலைவர் கலைஞர் அவர்களின் திருஉருவச்சிலைக்கு மாலை அணிவித்து புகழ் அஞ்சலி செலுத்தப்படுகிறது.

மாவட்ட கழக அவைத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாநில விவசாய தொழிலாளர் அணி செயலாளர் அன்னியூர் சிவா, மாவட்ட துணை செயலாளர்கள் டி.என்.முருகன், இரா.கற்பகம் , தலைமைக் கழக வழக்கறிஞர் சுவை. சுரேஷ் , மாநில மகளிர் அணி பிரச்சாரக் குழு செயலாளர் மோ.தேன்மொழி ஆகியோர் முன்னிலையில் நடைபெறும் நினை வேந்தல் நிகழ்வைத் தொடர்ந்து பொதுமக்களுக்கு அன்னதானம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட உள்ளன

இந்த நினைவேந்தல் நிகழ்வுகளில் மாநில - மாவட்ட கழக நிர்வாகிகள் , ஒன்றிய - நகர - பேரூர் - கிளைக் கழக செயலாளர்கள் , நிர்வாகிகள் , சார்பு அணிகளின் நிர்வாகிகள் , உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் என விழுப்புரம் ( தெற்கு ) மாவட்ட கழகத்தின் அனைத்து நிலை கழகத் தோழர்களும் திரளாக கலந்து கொள்ள கேட்டுக்கொள்கிறேன்

தலைவர் கலைஞர் புகழ் ஓங்கட்டும் !

தரணி உள்ளவரை நிலைக்கட்டும் !!

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில்

## முத்தமிழறிஞர் கலைஞர் 8ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்ச்சி!

### மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல் வகாப் எம்.எல்.ஏ. அறிக்கை!



நெல்லை, ஆக. 6-

நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல் வகாப் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு, கணினி அறிவியலிலும், மருத்துவத்துறையிலும் உலகெல்லாம் ஆதிக்கம் செலுத்தும் வகையில், ஒருங்கிணைந்த, ஒப்பற்ற வளர்ச்சியைக் காண நாளும் உழைத்திட்ட நவீன தமிழகத்தின் சிற்பி முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு, 07.08.2026 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில், வண்ணாரப்பேட்டை, ,நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில், நெல்லை மத்திய மாவட்ட திமுக அவைத்தலைவர் வி.கே. முருகன் அவர்கள் தலைமையில், அலங்கரிக்கப்பட்ட தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து, பூத்தூவி புகழஞ்சலி செலுத்தும் நிகழ்வு நடைபெற இருக்கிறது.

நெல்லை மத்திய மாவட்டத்திற்குட்பட்ட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், பகுதி, ஒன்றிய கழக நிர்வாகிகள், வட்ட, கிளைக் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள் அனைவரும் கலந்து கொண்டு மரியாதை செலுத்திட கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### நெல்லை மேற்கு மாநகர தி.மு.க. சார்பில்

## கலைஞர் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை!

### மாநகரப் பொறுப்பாளர் சு.சுப்பிரமணியன் அறிக்கை!

நெல்லை.ஆக.6-

நெல்லை மேற்கு மாநகர பொறுப்பாளர் சு.சுப்பிரமணியன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு.

அதில் அவர் கூறியிருப்பதாவது.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 8 வது ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு கழகத் தலைவர் தளபதியார் அவர்களின் ஆணைக்கிணங்க,சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவர் கழக இளைஞர் அணி செயலாளர் இளம்தலைவர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, கழக துணைப் பொதுச் செயலாளர் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்களின் அறிவுறுத்தலின்படி (07-08-2026 வெள்ளிக்கிழமை) நாளை காலை 10 மணிக்கு மாநகர தி.மு.க. அலுவலகத்தில் நெல்லை பேட்டை கிழக்கு பகுதி பொறுப்பாளர் நமச்சிவாயம் தலைமையில் கழக நிர்வாகிகள் முன்னிலையில் கலைஞர் அவர்களின் திரு உருவப் படத்திற்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தும் நிகழ்வு நடைபெறுகிறது.

ஆகவே மாநகர நிர்வாகிகள், பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், மாநகர சார்பு அணிகளின் நிர்வாகிகள், BLA2,BDA,BLC ஆகியோர் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## தி.மு.க...

**அ**திகாரம்
இல்லாவிட்டால்
என்ன

"அதிக காரம்" உள்ள
சுயமரியாதை
இயக்கம்
தி.மு.க. என்பதை

உதயநிதி
மீதான கைது
முயற்சியாலும்

சென்னைக்கும் செங்கிப்பட்டிக்குமான
காவல்துறை பாதுகாப்போடு
இணைந்த அணிவகுப்பாலும்

தொண்டர்களின் பேரெழுச்சியாலும்
உலகுக்கே எடுத்துக் காட்டியிருக்கிறது
மதிகெட்ட
மக்குத் த.வெ.க...



என்னநாஞ்
சொல்றது



மருது அழகுராஜ்
கழகச் செய்தித் தொடர்புக் குழு துணைத் தலைவர்